பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 07 2024 6 30

ஞாயிற்றுக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வருங்கால சந்ததியினருக்கு வளமான சுற்றுச்சூழலை உருவாக்கித் தரும் நோக்கில் அன்னையின் பெயரில் மரம் வளர்க்கும் இயக்கும் தொடங்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. பாக்கெட்டுகளில் அடைத்து விற்கப்படும் பொருட்கள் குறித்த விவரங்களை நுகர்வோர் தெளிவாக அறிந்துகொள்ளும் வகையில் அதற்கான விதிமுறைகளில் மத்திய அரசு திருத்தங்கள் கொண்டுவந்துள்ளது.

3. உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தமிழகத்திற்கான காவிரி நீரை கர்நாடகம் விடுவிக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான 5வது மற்றும் கடைசி 20-20 கிரிக்கெட் போட்டியில் ஜிம்பாப்வே வெற்றி பெற 168 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

வருங்கால சந்ததியினருக்கு வளமான சுற்றுச்சூழலை உருவாக்கித் தரும் நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி ‘அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம்’ என்ற இயக்கத்தை தொடங்கியிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் 11 லட்சம் மரங்களை ஒரே நாளில் நடும் உலக சாதனையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

புகை மாசுவை தடுக்கும் நோக்கில் 2025ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் 20 சதவீதம் எத்தனால் கலந்த பெட்ரோல் வினியோகத்தைக் கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்திற்கான நிதியம் ஒன்றை மத்திய அரசு தொடங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தியாவின் உயிர் மூச்சாக விளங்குவதாக குறிப்பிட்ட அவர், நாட்டில் 12 சதவீத வனப்பகுதி இம்மாநிலத்தில் அமைந்துள்ளதாகக் கூறினார்.

சுற்றுச்சூழலைக் காப்பதன் மூலம் இம்மாநிலத்தில் சுற்றுலாவின் தரமும் உயர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மத்தியப்பிரதேச மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் மற்றும் முக்கியப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

பாக்கெட்டுகளில் அடைத்து விற்கப்படும் பொருட்கள் குறித்த விவரங்களை நுகர்வோருக்கு தெளிவாக தெரிவிக்கும் வகையில் அதற்கான விதிமுறைகளில் மத்திய அரசு திருத்தங்கள் கொண்டு வந்துள்ளது.

கடைகளிலோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ விற்கப்படும் பொருட்கள் குறித்த விவரங்கள், உறையின் மீது தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று புதிய விதிகளில் கூறப்பட்டுள்ளது.

வெவ்வேறு நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்கள் எவ்வாறு மாறுபட்டுள்ளன என்பது குறித்த தகவல்களையும் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கு இந்தப் புதிய விதி வகை செய்கிறது.

<<<<>>>>

‘எமது அரசியல் சாசனம் எங்கள் கௌரவம்’ இயக்கத்தின் மண்டல அளவிலான இரண்டாவது நிகழ்ச்சி உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

நாட்டின் 75வது குடியரசு தினத்தையொட்டி இந்திய அரசியல் சாசனம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதை நினைவுகூறும் வகையிலும், அரசியல் சாசனத்தின் மாண்புகளையும், அதனால் சட்டரீதியாக கிடைத்துள்ள உரிமைகளையும் மக்களுக்கு எடுத்துக்கூறும் வகையில் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசியல் சாசனம் குறித்தும், சட்டரீதியான உரிமைகள் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இணையதள சேவையையும் மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம் தொடங்கி உள்ளது.

<<<<>>>>

மின்சாரத்தில் இயங்கும் லாரிகளை புழக்கத்தில் கொண்டுவருவதற்கான ஆலோசனைகளை அளிக்குமாறு நிதி ஆயோக் பல்வேறு தரப்பினரிடம் கோரியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மாணவர்கள், சரக்குப் போக்குவரத்து உரிமையாளர்கள், தொழில்துறையினர், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோரிடம் மின்சார வாகனங்களை சரக்குப் போக்குவரத்திற்கு பயன்படுத்துவது குறித்த ஆலோசனைகளையும் நிதி ஆயோக் கோரியுள்ளது.

இந்த திட்டத்தை பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மைக் கல்விக் கழகமும், **Smart Freight** மையம் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து செயல்படுத்த உள்ளன.

<<<<>>>>

அமெரிக்காவில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த முன்னாள் அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு உலகின் பல்வேறு தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. பொதுச்செயலாளலர் திரு. அண்டனியோ குட்ரெஸ், இந்தத் தாக்குதல் ஒரு அரசியல் வன்முறை என்றும் இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் கூறியுள்ளார். திரு. ட்ரம்ப் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க துணை அதிபர் திருமதி கமலா ஹாரிஸ் விடுத்துள்ள செய்தியில், திரு. ட்ரம்ப் மீதான தாக்குதல், அதிர்ச்சியளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் வன்முறைக்கு இடமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அதிபர் திரு. பராக் ஒபாமா, அமெரிக்கா ஒரு ஜனநாயக நாடு என்றும், இங்கு வன்முறைச் செயல்களுக்கு இடமில்லை என்றும் குறிப்பிட்டார்.

பிரிட்டன் பிரதமர் திரு. **Keir Starmer,** இத்தாலி பிரதமர் ஜியார்ஜியா மெலோனி, கனடா பிரதமர் திரு. ஜஸ்டின் ட்ருடோ, ஜப்பான் பிரதமர் திரு. ஃபுமியோ கிஷிடா, ஆஸ்திரேலிய பிரதமர் ஆந்தொனி ஆல்பனீஸ், இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் இந்தத் தாக்குதலை கண்டித்துள்ளனர்.

அமெரிக்க முன்னாள் அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தாக்கப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் திரு. ட்ரம்ப் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

<<<<>>>>

பூரி ஜெகன்நாதர் ஆலயத்தின் பொக்கிஷ அறை இன்று திறக்கப்பட்டது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு செல்வச்செழிப்பு மிக்க மன்னர்களும், செல்வந்தர்களும் பூரி ஜெகன்நாதர் கோவிலுக்கு அளித்த அரியவகை ரத்தினக் கற்கள், நகைகள் உள்ளிட்டவை இந்தப் பொக்கிஷ அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்பு 1985ஆம் ஆண்டு பூரி ஜெகன்நாதர் ஆலயத்தின் பொக்கிஷ அறை திறக்கப்பட்டு தூய்மை செய்யப்பட்டது.

12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பூரி ஜெகன்நாதர் கோவிலின் அரியவகை ரத்தினக் கற்களையும், நகைகளையும் பற்றி அறிந்துகொள்வதற்கு பக்தர்கள் மிகுந்த ஆர்வமுடன் உள்ளனர்.

<<<<>>>>

புதிய குற்றவியல் சட்டங்கள் மின்னணு கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதால் வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண முடியும் என்று நாமக்கல்லைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. ஜெயபால் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

<<<>>>>

தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் நீலகிரி முதல் திண்டுக்கல் வரையிலான மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டிய மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

<<<>>>>

சேலம் மாவட்டம் ஏற்காடு மலைப் பகுதியை ஒட்டிய கிராமங்களில் ‘இயற்கையே நேசி’ என்ற தன்னார்வ அமைப்பினர் பொதுமக்களுடன் இணைந்து மரம் நடும் பணியை மேற்கொண்டுள்ளனர்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்த தன்னார்வ அமைப்பின் மூலம் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக அந்த அமைப்பைச் சேர்ந்த தன்னார்வலர் திரு. வைகை நாதன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று மாநில அரசு கூறியுள்ளது.

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பெண்களுக்கான இலவச பயணத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வருவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 15 லட்சம் பேருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிமைத்தொகை இதுவரை கிடைக்கப்பெறாதவர்களுக்கும், அதனை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும், அதன் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கையையும் புள்ளி விவரங்களுடன் அந்த செய்திக்குறிப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

காவிரியில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை மதித்து, கர்நாடக அரசு ஆண்டுதோறும் தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

வேலூர் மாவட்டம், காட்பாடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரியில் தமிழகத்திற்கு உரிய நீரை பெற்றுத்தர திமுக அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

கர்நாடகாவில் உள்ள காங்கிரஸ் அரசை எதிர்த்து, திமுக அரசு குரல் கொடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

<<<<>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

கர்நாடக அணைகளில் இருந்து வெளியேற்றப்பட்டு வரும் உபரிநீர் அதிகரித்து வருவதால் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலா தலத்தில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

-------------

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் கோடைகால பருவத்திற்காக நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாகவும், அதனைப் பயன்படுத்தி விவசாயிகள் பயனடையுமாறும் ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் பல்வேறு தொழிற்பிரிவுகளைச் சார்ந்த பயிற்சியாளர்களுக்கு, பிரதமர் தேசிய தொழிற்பழகுநர் திறன் பயிற்சி முகாம், நாளை நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

-------------

பெரம்பலூர் மாவட்டத்தில் நாட்டுக்கோழி பண்ணைகள் அமைக்க விருப்பமுள்ளவர்கள் அருகாமையில் உள்ள கால்நடை மருந்தகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று உரிய விவரங்களை சமர்ப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் திருமதி கற்பகம் தெரிவித்துள்ளார்.

-------------

சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை, பள்ளி மேலாண்மை

குழுவின் மூலம் நிரப்பிட தகுதியான நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஹராரேயில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான 5வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் ஜிம்பாப்வே வெற்றி பெற 168 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக டாஸ் வென்ற ஜிம்பாப்வே அணி, பந்துவீச தீர்மானித்தது. இதையடுத்து முதலில் விளையாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 167 ரன் எடுத்தது.

168 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடி வரும் ஜிம்பாப்வே, சற்றுமுன் வரை 4 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 20 ரன் எடுத்துள்ளது.

---------------

தேசிய மாணவர் படையின் மாநிலங்களுக்கு இடையிலான துப்பாக்கிச் சுடும் போட்டியில் தமிழ்நாடு 3 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாம் இடம் பெற்றுள்ளது.

திருச்சியில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்ற இப்போட்டியில் கர்நாடக அணி 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது. ஒடிசா அணி மூன்றாம் இடம் பிடித்தது.

தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா ஆகிய 5 மாநிலங்களில் இருந்து 380க்கும் மேற்பட்ட மாணவ – மாணவிகள் இதில் பங்கேற்றனர்.

-------------

விம்பிள்டன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவாக் ஜோக்கோவிச்சும் - ஸ்பெயின் நாட்டின் கார்லஸ் அல்காரசும் விளையாடுகின்றனர்.

இந்தப் போட்டி லண்டனில் உள்ள **All England Club** மைதானத்தில் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

---------------

ஸ்பெயின் - இங்கிலாந்து அணிகள் இடையேயான யூரோ கால்பந்து கோப்பை இறுதிப் போட்டி இன்று நள்ளிரவு பெரிலினில் நடைபெறுகிறது.

--------------

மியாமியில் நாளை அதிகாலை தொடங்கும் காண்டினெண்டல் கோப்பை கால்பந்துப் போட்டியில் கொலம்பியா – அர்ஜென்டினா அணிகள் விளையாடுகின்றன.

**<<<<The End>>>>**